Lewis Hartsough, 1828-1919



பாமாலை 445 வா! நீசப் பாவி வா

1 வா! நீசப் பாவி வா,

என்றென்னைக் கூப்பிட்டீர்;

என் தோஷம் தீர ரட்சகா!

சுத்தாங்கம் பண்ணுவீர்.

பல்லவி

அருள் நாயகா!

நம்பி வந்தேனே,

தூய திரு ரத்தத்தால்

சுத்தாங்கம் பண்ணுமே.

2 சீர் கெட்ட பாவி நான்,

என் நீதி கந்தையே;

என்றாலும் உமதருளால்

துர்க்குணம் மாறுமே

3 மெய் பக்தி பூரணம்

தேவாவியால் உண்டாம்

உள்ளன சமாதானமும்

நற்சீரும் பெறலாம்

4 உண்டான நன்மையை

நீர் விர்த்தியாக்குவீர்

இப்பாவக் குணத் தன்மையை

நிக்ரகம் பண்ணுவீர்

5 ஆ! தூய ரத்தமே!

ஆ! அருள் நாயகா!

ஆ! கிருபா விஷேசமே!

ஆ! லோக ரட்சகா